# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,889—1970 ජනවාරි 16 වැනි සිකුරාදා—1970.1.16**

14,889 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு சனவரி மாதம் 16 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | — | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 11 | விதிச செயற்குழுவின் அறிவித்தல்கள் .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நாணுவித அறிவித்தல்கள் .. .. .. | 15 |


## துணை விதிகள்

### நீர்கொழும்பு மாநகர சபை

#### மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்

(252 ம் அதிகாரமாம்) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 147, 267, 272 ஆகிய பிரிவுகளின் கீழ் நீர்கொழும்பு மாநகர சபையாலாக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 268 ம் பிரிவின் கீழ் உள்ளூராட்சி அமைச்சரால அங்கீகரிக்கப்பட்ட முதுசபையினுலும் பிரதிநிதிகள் சபையினுலும் உறுதிப்படுத்தப்பட்டதுமான துணைவிதி.

ஈ. ஜி. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 31 ந் உ.

#### துணைவிதி

உத்தரவுப்பத்திரங்கள் சம்பந்தமாக 1927 நவம்பர் 4 ந் தேதிய 7,613 ம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்டு, 1949, திசம்பர் 23 ந் திகதிய 10,057 ம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட துணைவிதியினுலும், 1959, திசம்பர் 24 ந் திகதிய 12,019 ம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட துணைவிதியினுலும் கடைசியாகத் திருத்தப்பட்ட பொதுத் துணைவிதிகள், 1 ம் துணைவிதியில் " அருவருப்பான அல்லது அபாயகரமான தொழில்கள் " பற்றிய வரையறையில் " வானொலிப்பெட்டி திருத்தற்கும் விற்பனை செய்தற்குமான கடையொன்று வைத்தல் " என்ற பதங்களுக்கிடாகப் பின்வருவனவற்றை இடுவதன் மூலம் மீண்டும் இத்தால் திருத்தப்படுகின்றன. " வானொலிப் பெட்டி திருத்துதற்கும், விற்பனை செய்தற்குமான ஒரு கடை வைத்தல், மிட்டாய்கள் உற்பத்தி செய்தல், ஒளிப்படக்கலைக்கூடம் ஒன்று வைத்தல், மருத்துவமனை அல்லது மருந்தகம்/அறுவை வைத்தியசாலை அல்லது மருந்துப்பாகசாலை ஒன்று வைத்தல், மொத்த விற்பனைக்காக சிகரட்டுக்கள் சேர்த்துவைத்தல், விற்பனைக்கான மின்சாரப் பொருள்களைச் சேர்த்துவைத்தல், மொத்த விற்பனைக்காக மூச்சுபானங்கள் சேர்த்து வைத்தல், விற்பனைக்காகப் புதிய அல்லது பழைய மோட்டார் உதிரிப்பாகங்கள் சேர்த்துவைத்தல், மின்கலங்கள் செம்மைப் படுத்தலுக்கும் மின்னேற்றுதற்குமான நிறுவனம் ஒன்று வைத்தல், உணவுப்பொருட்கடையொன்று வைத்தல், விற்பனைக்காக ஆயுர்வேத மருந்துச்சரக்குகள் சேகரித்துவைத்திருத்தல், ஆயுர்வேத மருந்துகளும், தைலங்களும் உற்பத்தி செய்தல் விடுதி வீடு ஒன்று வைத்தல், மின் முலாமிடுதற்கான ஒரு நிறுவனம் வைத்தல்.

1–573—16.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,889.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகன்.

## நீர்கொழும்பு மாநகர சபை

### மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்

(252 ம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 267, 272 ஆகிய பிரிவுகளின் கீழ் நீர்கொழும்பு மாநகர சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 268 ம் பிரிவின் கீழ் உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு மூதவையானும் சனப் பிரதிநிதிகள் சபையானும் உறுதிப்படுத்தப்பட்ட துணைவிதி.

ஈ. ஜி. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1969 ம் ஆு டிசெம்பர் மீ 31 ந உ.

### துணைவிதி

1960 சனவரி 1 ந் திகதிய 12,027 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட தனிப்பட்ட சந்தைகள், முறைச்சந்தைகள்பற்றிய நீர்கொழும்பு மாநகர சபைத் துணைவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :—

(1) அதன்கண்ணுள்ள 1 (3) ம் துணைவிதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய துணைவிதியைச் சேர்ப்பதன் மூலம் :—

" 1 (3), (1) ம் பந்தியின் கீழ் வழங்கப்படும் உத்தரவுப்பத்திரம் ஒவ்வொன்றுக்கும் செலுத்தப்படற்பாலதான கட்டணம் தனிப்பட்ட சந்தையொன்றுக்கு அறுநூற்றிருபத்தைந்து ரூபாவாகவும் தனிப்பட்ட முறைச்சந்தையொன்றுக்கு முன்னூற்றி எழுபத்தைந்து ரூபாவாகவும் இருத்தல் வேண்டும்."

1–575—16.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,889.

---

## மாத்தளை மாநகர சபை

### மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்

(252 ம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 267, 272 ஆகிய பிரிவுகளின்கீழ் மாத்தளை மாநகர சபையால் ஆக்கப்பட்டதும், உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 268 ம் பிரிவிற் கிணங்க மூதவையினாலும், பிரதிநிதிகள் சபையினாலும் உறுதிப்படுத்தப்பட்டதுமான துணைவிதி.

ஈ. ஜி. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1969 ம் ஆு டிசெம்பர் மீ 31 ந உ.

### துணைவிதி

மாத்தளை நகர சபையால் ஆக்கப்பட்டு 1927, திசம்பர் 9 ஆந் தேதிய 7,619 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்டதும், 1948, மே 14 ஆந் தேதிய 9,863 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட துணைவிதிகளினாற் கடைசியாகத் திருத்தப்பட்டதும், (252 ம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 325 (1) ம் பிரிவின் பிரகாரம் மாநகரப் பிரதேசத்தில் நடைமுறையில் வைக்கப்பட்டிருந்ததுமான துணைவிதிகள் இத்தால் மேலும் " iii—பொதுவாகப் பால் விற்பனை செய்தற்கான சட்டவாக்கம் " என்னும் தலைப்பின் கீழ்ப் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :—

(1) இரண்டாம் ஒழுங்கு விதியின் (iii) ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியினை இடுதன் மூலமும் :—

" (ii) ஒவ்வொரு பதிவட்டை தொடர்பிலும் ஆண்டொன்றுக்கு ரூபா 10 கொண்ட கட்டணமொன்று செலுத்தப்பட்டதன் மேல் அத்தகைய பதிவானது சபையினாற் செய்யப்படலாம் " ; அத்துடன்

(2) மூன்றும் ஒழுங்குவிதியினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பிரிவினை உட்புகுத்தன் மூலமும் :—

" 3அ. பதிவுசெய்யப்பட்ட பாற்பண்ணையாளர் ஒருவரால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது அத்தகைய பதிவு செய்யப்பட்ட பாற்பண்ணையாளர் ஒருவரால் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கும் பால் வியாபாரி ஒவ்வொருவருக்கும், காலத்துக்குக் காலம் மாநகரசபை முதல்வரால் பணிக்கப்பட்ட வண்ணம் உருவாக்கப்பட்டதும் மாநகரசபை ஆணையாளரால் ஒப்பமிடப்பட்டதுமான பதிவு அட்டைகள் ஆண்டு தோறும் வழங்கப்படுதல் வேண்டும். அவ்வட்டைகள் ஒவ்வொன்றும் வியாபாரியின் நிழற்படமொன்றையுடைய தாதலுடன் அத்தகைய ஒவ்வொரு நிழற்படத்தின் பிரதியொன்று ஆணையாளரிடம் காப்பிடப்படுதல் வேண்டும்.

3ஆ. (1) மேற்சொல்லப்பட்ட வண்ணம் வழங்கப்பட்ட செல்லுபடியான பதிவட்டையொன்றை உடையவராயும் அதனைத் தம் உடமையில் வைத்திருந்தாலன்றியும், எவ்வாளும் பாலினை விற்றலோ, விற்பனை செய்யச் சம்மதித்தலோ, கூறி விற்றலோ அல்லது விற்பனை செய்வதற்காக வைத்திருத்தலோவாகாது.

(2) எவரேனுமாள் பாலினை விற்கும், விற்க ஒப்புக் கொள்ளும், கூறிவிற்கும் அல்லது விற்பதற்காக வைத்திருக்குமிடத்து எவரேனும் மாநகர சபை அலுவலரினால் அல்லது பொலிசு அலுவலரினால் பரிசோதனைக்காக அத்தகைய அட்டை யொன்றைத் தந்துதவும்படி கட்டளையிடப்பட்டதன்மேல் அவ்வாறு தந்துதவ மறுக்கும் அவ்வாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) பொது மக்களின் உடனல அக்கறையில், அவ்வாறு செய்வதவசியமென அவருக்குத் தோன்றினால் மாநகரசபை முதல்வர் ஏதேனும் பதிவட்டையைச் செல்லுபடியற்றதாக்கலாம் ".

1–517—16.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,889

---

## அம்பலாங்கொடை நகர சபை

### நகர சபைகள் கட்டளைச் சட்டம்

(255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153, 157 ஆகிய பிரிவுகளின் கீழ் அம்பலாங்கொடை நகர சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 154 ஆம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

வி. எம். பீரிஸ்,
பதில் நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
21.12.1969.

### துணைவிதி

அம்பலாங்கொடை நகர சபையால் ஆக்கப்பட்டு 5.6.1959 ந் திகதிய 11,763 ஆம் இலக்க அரசாங்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு 10.12.65 ந் திகதிய 14,581 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட துணைவிதியினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான அபாயகரமானவையும் அருவருப்பானவையுமான தொழில்கள் சம்பந்தமான துணைவிதிகள் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :—

1. அவற்றின் 1 (1) ஆம் துணைவிதியின் இறுதியில் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும் :—
   வெடிப்பொருட்களைச் சேகரித்துவைத்திருத்தல்.

2. அவற்றின் 1 (2) ஆம் துணை விதியின் இறுதியில் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன் மூலமும் :—
   சீமெந்து சேகரித்துவைத்திருத்தல்.
   உலோகப் பொருட்கள் சேகரித்துவைத்திருத்தல்.

3. அவற்றின் 1 (3) ஆம் துணை விதியின் இறுதியில் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன் மூலமும் :—
   வானொலிப் பெட்டிகள் திருத்தும் நிறுவனமொன்று வைத்திருத்தல்
   மொத்த விற்பனைக்காகப் பதனழியக்கூடிய உணவுப்பதார்த்தங்களையும் தகரத்திலடைக்கப்பட்ட உணவுப் பொருட்களையும் சேகரித்துவைத்திருத்தல்
   10 கலன்களுக்கதிகமான தேங்காயெண்ணெய் சேகரித்து வைத்திருத்தல்.

1–590—16.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,889

## மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்

**(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் 272 ஆம் பிரிவுகளின் கீழ் நீர்கொழும்பு மாநகர சபையாலாக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 268 ஆம் பிரிவின் கீழ் உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 268 ஆம் பிரிவின் கீழ் செனெற்றும் பிரதிநிதிகள் சபையாலும் உறுதிப்படுத்தப்பட்ட துணை விதிகள்.**

ஈ. ஜி. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு 1, 1969.12.31.

### பொது நூல் நிலையங்கள் பற்றிய துணைவிதிகள்

1. சபையால் தாபிக்கப்பட்டு தாபரிக்கப்படும் பொது நூல்நிலையம் கீழ்க்கண்டவற்றைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் :—

(அ) புத்தகங்களை இரவல் கொடுக்கும் நூல்நிலையம் ஒன்று,

(ஆ) ஆதார நூல்நிலையம் ஒன்று ;

(இ) வாசிகசாலை ஒன்று.

2. (1) பொது நூல் நிலையத்தின் மேற்பார்வையும் பொது நிருவாகமும் கீழ்க் கண்டோரைக் கொண்ட (இதில் இனிமேல் இதனகத்தே " குழு " எனக் குறிப்பிடப்படும்) ஒரு நூல் நிலையக் குழுவிடம் ஒப்படைக்கப்படவேண்டும் :—

(அ) சபையின் அவ்வப்போதைய நகரமுதல்வர்,

(ஆ) சபையால் தெரிந்தெடுக்கப்படும் நாலுக்கு மேற்படாத சபை உறுப்பினர்.

(இ) அதே கூட்டத்தில் சபையால் தெரிந்தெடுக்கப்படும் மாநகரப் பிரதேச வாசிகளான ஐந்து பிரமுகர்கள்.

(2) பொது நூல் நிலையத்துக்குப் பொறுப்பாளியாக இருப்பதற்கு நூல்நிலைய பொறுப்பாளர் ஒருவரைச் சபை நியமிக்கலாம். அவரே அந் நூலகத்தில் ஒழுங்கை நிலைநாட்டுதற்குப் பொறுப்பாளியாக இருத்தல் வேண்டும்.

3. (1) நகர முதல்வர், அவருடைய பதவிபற்றி, குழுத்தலைவராக இருத்தல் வேண்டும். குழுக்கூட்டம் ஒவ்வொன்றுக்கும் அவரே தலைமை வகிக்கவேண்டும். எக்கூட்டத்துக்கும் தலைவர் வராவிட்டால், வந்துள்ள ஏனைய உறுப்பினர்களால் அதன் பொருட்டு தெரிந்தெடுக்கப்படும் குழு அங்கத்தவர் அக்கூட்டத்துக்கு தலைமைவகிக்கவேண்டும்.

(2) எக்கூட்டத்திலும் தலைவருக்கு ஒரு மூலவாக்கும் எவ்விடயம் சம்பந்தமாகவேனும் பெறும் வாக்குகள் சமமாக இருப்பின் ஒரு நிர்ணயவாக்கும் இருத்தல் வேண்டும்.

4. ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட நிறைவெண் இருந்தாலன்றி, குழுக்கூட்டம் எதிலும் எக்கருமமும் நடத்தப்படலாகாது.

5. குழு அவசியமெனக் கருதும் நிபந்தனைகளுக்கமைய பொது நூல் நிலைய வளவின் எப்பகுதியையும் உபயோகிப்பதற்கு எவரையும் அனுமதிக்கவேனும், அவர் நூல்நிலையம் பற்றிய இத்துணைவிதிகள் எதையும் மீறியிருப்பின் அவர் அந்த வளவின் எப்பாகத்தையும் உபயோகிப்பதை மறுக்கவேனும் குழு அதிகாரமுடையதாக இருத்தல் வேண்டும்.

### இரவல் தரும் நூல்நிலையம்

6. (1) எவரேனும்—

(அ) பதினைன்குக்குக் குறையாத வயதினராகவும்,

(ஆ) படித்தவராகவும்,

(இ) மாநகர சபைப் பிரதேசத்துக்குள் வசிப்பவராகவும் அல்லது ஒரு காரியாலயமோ தொழில் செய்யும் இடமோ உடையவராகவும் ;

(ஈ) நூல்நிலையப் பொறுப்பாளரிடம் ஐந்து ரூபாய் கட்டியவராகவும் ;

(உ) இருபத்தைந்து ரூபாய்க்குக் குறையாத மாத வாடகை ஈட்டும் ஒரு வீட்டில் குடியிருப்பவராலேனும் அத்தகைய வீட்டின் சொந்தக்காரராலேனும் சிபார்சு செய்யப்பட்டவராகவும் இருந்தாலன்றி,

அவர் புத்தகங்கள் இரவல் கொடுக்கும் நூல்நிலையத்தின் அங்கத்தவராக சேர்த்துக்கொள்ளப்படலாகாது.

(2) புத்தகங்கள் இரவல் கொடுக்கும் நூல்நிலையத்தின் உறுப்பினராக சேர்ந்துகொள்ள விரும்பும் ஒவ்வொருவரும் நூல்நிலையப் பொறுப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரு பத்திரத்தில், அதன் பொருட்டு விண்ணப்பித்தல் வேண்டும். அந்த விண்ணப்பம் கீழ்க்காணும் எவர் ஒருவராலேனும் மேலொப்பமிடப்படவேண்டும் :—

(அ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்,

(ஆ) சபை உறுப்பினர் ஒருவர்,

(இ) குழு உறுப்பினர் ஒருவர்,

(ஈ) மதகுரு ஒருவர்,

(உ) சட்டத்தொழில் அல்லது வைத்தியத் தொழில் செய்யும் ஒருவர்,

(ஊ) சாமாதான நீதவான் ஒருவர்,

(எ) ஆண்டு சிவில் பட்டியலில் அவருடைய பெயருள்ள அரசாங்க ஊழியர் ஒருவர்,

(ஏ) ஒரு உயர்தரப் பாடசாலை அதிபர் ஒருவர்,

(ஐ) ஆண்டு ஒன்றுக்கு ஆயிரத்தைந்நூறு ரூபாய்க்குக் குறையாத சம்பளமுள்ள சபையின் உத்தியோகத்தர் ஒருவர்.

(3) மேற்போந்த பந்தியின் கீழ் ஒரு விண்ணபத்தில் மேலொப்பம் இடுதற்கு உரித்துள்ள எவரும் அவரது சொந்த விண்ணபத்துக்கு மேலொப்பம் பெறும்படி கேட்கப்படலாகாது.

7. புத்தகங்கள் இரவல் கொடுக்கும் நூல் நிலையத்தின் ஒரு உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வொருவருக்கும் நூல்நிலையப் பொறுப்பாளர் இரண்டு சீட்டுகள் கொடுக்க வேண்டும். அன்னூர் அச்சீட்டு ஒவ்வொன்றின் பேரிலும் ஒரு புத்தகம் இரவல் வாங்குதற்கு உரித்துடையவராவார்.

8. புத்தகங்கள் இரவல் கொடுக்கும் நூல்நிலைய உறுப்பினர் ஒருவர் அவருக்கு வழங்கப்பட்ட ஒரு சீட்டின் பேரில் அந்த நூல்நிலையத்திலிருந்து எடுக்கப்பட்ட புத்தகம் எதற்கும் பொறுப்பாளியாதல் வேண்டும்.

9. புத்தகங்கள் இரவல் கொடுக்கும் நூல்நிலைய உறுப்பினர் ஒருவர் துணைவிதி 7 இன் கீழ் வழங்கப்பட்ட சீட்டு ஒன்றை இழக்குமிடத்து அந்த இழப்பை நூல்நிலையப் பொறுப்பாளருக்கு உடனே அறிவித்தல் வேண்டும். புத்தகங்கள் இரவல் கொடுக்கும் நூல்நிலையத்திலிருந்து அச்சீட்டின் பேரில் புத்தகம் எதுவும் இரவல் வாங்கப்படவில்லையென்று நூல்நிலையப் பொறுப்பாளர் திருப்தியடைவாரேல் அவர் அந்த உறுப்பினருக்கு ஒரு இணைப்பிரதிச் சீட்டைக் கொடுக்கலாம். இழப்புபற்றி நூல்நிலையப் பொறுப்பாளருக்கு அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து முப்பது நாட்களாவது கழியும்வரை அவரால் அத்தகைய இணைப்பிரதிச் சீட்டு கொடுக்கப்படலாகாது.

10. புத்தகங்கள் இரவல் கொடுக்கும் நூல்நிலையத்திலிருந்து ஒரு உறுப்பினரால் இரவலாகப் பெற்றுக்கொள்ளப்படும் புத்தகம் எதுவும், அது இரவலாகப் பெற்றுக்கொள்ளப்படும் தேதியிலிருந்து பதினைன்கு தினங்களுக்குள் நூல்நிலையப் பொறுப்பாளரிடம் திருப்பிக் கொடுக்கப்படவேண்டும். அத்தகைய புத்தகம் எதுவும் வேறு உறுப்பினர் எவருக்கும் தேவைப்படாதிருந்தால் அவ்வுறுப்பினரே அப்புத்தகத்தை மேலும் பதினைன்கு தினங்களுக்கு இரவலாகப் பெற்றுக் கொள்வதற்கு நூல்நிலையப் பொறுப்பாளர் அனுமதிக்கலாம்.

11. ஒரு உறுப்பினர், துணைவிதி 10 இல் சொல்லப்படும் பதினைன்கு தினக்கால அளவுக்குள் நூல்நிலையப் பொறுப்பாளரிடம் எப்புத்தகத்தையும் திருப்பிக் கொடுக்கத் தவறுவாராயின் அப்புத்தகம் திருப்பிக் கொடுக்கப்படாதிருக்கும் ஒவ்வொரு தினத்துக்கும் பத்து சதம் தெண்டம் கொடுப்பதற்கு அவர் பாத்திரவாளியாவார்.

12. ஒரு உறுப்பினர், துணைவிதி 10 இல் சொல்லப்படும் பதினைன்கு தினக் கால அளவு முடிவுற்ற முப்பது தினங்களுக்குள், புத்தகங்கள் இரவல் கொடுக்கும் நூலநிலையத்திலிருந்து அவர் இரவலாகப் பெற்ற புத்தகம் எதையும் திருப்பிக்கொடுக்கத் தவறினால் அப்புத்தகம் இழக்கப்பட்டதாகக் கருதப்படவேண்டும்.

13. ஒரு உறுப்பினர் இரவலாகப் பெற்ற ஒரு புத்தகம் இழக்கப்பட்டால் அல்லது இழக்கப்பட்டதாகக் கருதப்பட்டால் அதற்குப் பதிலாக ஒரு புத்தகம் வாங்கி வைக்கும் செலவைக் கொடுப்பதற்கு அந்த உறுப்பினர் பாத்திரவாளியாவார்.

14. புத்தகங்கள் இரவல் கொடுக்கும் நூல்நிலையத்திலிருந்து தாம் இரவலாகப் பெற்ற புத்தகம் எதையும் எந்த உறுப்பினரும் சேதப்படுத்தவேனும் ஊறுபடுத்தவேனும் கூடாது.

15. புத்தகங்கள் இரவல் கொடுக்கும் நூல்நிலையத்திலிருந்து தாம் இரவலாகப் பெற நினைக்கும் புத்தகம் எதிலுமுள்ள சேதத்தையேனும் ஊறுபாட்டையேனும் நூல்நிலையப் பொறுப்பாளரின் கவனத்துக்குக் கொண்டு வருதல் ஒவ்வொரு உறுப்பினரதும் கடமையாகும். அவர் அத்தகைய சேதத்தை அல்லது ஊறுபாட்டை, நூல்நிலையப் பொறுப்பாளரின் கவனத்துக்குக் கொண்டுவராவிட்டால் அப்புத்தகம் எதுவும் ஊறுபாடு அல்லது சேதம் இல்லாமல் அவருக்கு கொடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படல் வேண்டும்.

16. ஒரு உறுப்பினரால் திருப்பிக் கொடுக்கப்படும் புத்தகம் ஒன்று அதனை மேலும் இரவல் கொடுத்துத் திருப்பிப் பெறுதற்குத் தகுதியற்றதான வகையில் அவரால் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றதென்று நூல்நிலையப் பொறுப்பாளர் திருப்தியடைவாராயின், அந்த உறுப்பினர் அதற்குப் பதிலாக ஒன்றை வாங்கி வைப்பதற்கான செலவைச் செலுத்தப் பாத்திரவாளியாவார். பதிற் புத்தகம் வாங்கி வைக்கப்படும்போது சேதமுற்ற புத்தகம் "பொது நூலகம்—சேதமுற்றபடியால் விற்கப்பட்டது" என்னும் வார்த்தைகள் அதன்மீது பொறிக்கப்பட்டு அந்த உறுப்பினரிடம் கொடுக்கப்படவேண்டும்.

17. (1) உறுப்பினர் எவரும் புத்தகங்கள் இரவல் கொடுக்கும் நூல் நிலையத்திலிருந்து தாம் இரவலாகப் பெற்ற எப்புத்தகத்தையும் எவருக்கும் இரவல் கொடுக்கக்கூடாது.

(2) இத்துணைவிதியின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளை மீறும் உறுப்பினர் எவரும் அவருடைய கட்டுக்காசை இழந்து புத்தகங்கள் இரவல் கொடுக்கும் நூல்நிலைய உறுப்பினராயிராது ஒழிதல்வேண்டும்.

18. (1) ஒரு தொற்று நோயால் அல்லது ஒட்டு நோயால் வருந்தும் எவராலும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றதென்று தாமறிந்த புத்தகம் எதையும், உறுப்பினர் எவரும், புத்தகங்கள் இரவல் கொடுக்கும் நூல்நிலையத்திற்குத் திருப்பிக் கொடுக்கக்கூடாது.

(2) புத்தகங்கள் இரவல் கொடுக்கும் நூல்நிலையத்திலிருந்து ஒரு உறுப்பினர் வாங்கிய ஒரு புத்தகம் தொற்று நோய் அல்லது ஒட்டு நோய் எதனுனும் எவருந்தும் எவராலும் உபயோகிக்கப்பட்டிருக்குமிடத்து அப்புத்தகம் அழிக்கப்பட்டு, அதற்குப் பதிலாக ஒரு புத்தகத்தை வாங்கி வைப்பதற்கு ஆகும் செலவை நூல்நிலையகப் பொறுப்பாளரிடம் அந்த உறுப்பினர் கொடுத்தல்வேண்டும்.

19. ஒரு குறித்த புத்தகத்தை எந்த உறுப்பினர் இரவலாகப் பெறுவது என்பது பற்றி புத்தகங்கள் இரவல் கொடுக்கும் நூல்நிலையத்தின் இரு அல்லது அதிலும் அதிகமான உறுப்பினருக்கிடையே ஏதும் பிணக்கு ஏற்படுமிடத்து நூல் நிலையத்தின் பொறுப்பாளர் அப்பிணக்கை தீர்த்து வைக்க வேண்டும்.

20. மற்றொரு உறுப்பினரால் ஏற்கனவே இரவலெடுக்கப்பட்டிருக்கும் புத்தகம் எதையும் இரவலாகப் பெறவிரும்பும் உறுப்பினர் எவரும் அதன் பொருட்டு வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் தமது பெயரையும் அப்புத்தகத்தின் பெயரையும் பதிதல் வேண்டும். அப்புத்தகத்தை இரவலாகப் பெற்ற உறுப்பினரால் அது திருப்பிக்கொடுக்கப்பட்டதும், நூல் நிலையப்பொறுப்பாளர் பதிவேட்டில் தமது பெயரைப் பதிந்துள்ள உறுப்பினருக்கு அதைக் கொடுக்கவேண்டும். எப்புத்தகத்துக்கேனும் இரு அல்லது அதிலும் அதிகமான உறுப்பினர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்திருக்குமிடத்து அவர்கள் தங்கள் பெயர்களைப் பதிவேட்டில் பதிந்துள்ள ஒழுங்குப்படி அப்புத்தகம் அவர்களுக்கு கொடுக்கப்படவேண்டும்.

21. மாநகர சபைப் பிரதேசத்துக்குள் வசிக்காமல் அல்லது கந்தோரையேனும் தொழில் செய்யுமிடத்தையேனும் வைத்திருக்காமல் விடும் உறுப்பினர் எவரும் புத்தகங்கள் இரவல் கொடுக்கும் நூல்நிலைய உறுப்பினராக இல்லாமல் போகவும், 7 ஆம் துணைவிதியின்கீழ் அவருக்கு கொடுக்கப்பட்ட இரண்டு சீட்டுகளையும் நூல்நிலையப்பொறுப்பாளரிடம் திருப்பிக்கொடுக்கவும் வேண்டும்.

22. எவராலேனும் துணைவிதி 6(1) (ஈ) இன் கீழ் கட்டப்பட்ட ஐந்து ரூபாவும் அவர் உறுப்பினராக இல்லாமல் போனதும், புத்தகங்கள் இரவல் கொடுக்கும் நூல்நிலையத்துக்கு அவர் கொடுக்குமதியான தொகையைக் கழித்துக் கொண்டு, அவரிடம் திருப்பிக் கொடுக்கப்படவேண்டும்.

23. ஞாயிற்றுக்கிழமைகளும், பொது விடுமுறை நாட்களும், உறுப்பினர்களுக்கு ஏழு தினங்களுக்காவது முன்னர் அறிவித்தல் கொடுத்த பின்னர் கையிருப்பைக் கணக்கெடுப்பதற்கேனும் வேறு ஏதும் நோக்கத்துக்கேனும் குழு நியமிக்கும் வேறு தினங்களும் தவிர, தினமும் காலை 9 மணிக்கும் மாலை 6 மணிக்குமிடையே புத்தகங்கள் இரவல் கொடுக்கும் நூல்நிலையம் திறந்திருத்தல் வேண்டும்.

### ஆதார நூலகம்

24. எவரும்—

(அ) நூல்நிலையப் பொறுப்பாளரிடமிருந்து, அவர், அதன் பொருட்டு அனுமதிபெற்றிருந்தாலன்றியும் ;

(ஆ) துணை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில், அவர் கையொப்பமிட்டிருந்தாலன்றியும்,

ஆதார நூல்நிலையத்தை உபயோகிக்கக் கூடாது.

25. நூல்நிலையப் பொறுப்பாளர்—

(அ) படித்தவராகவும் ;

(ஆ) மாநகரசபைப் பிரதேசத்துக்குள் வசிப்பவராகவும்,

(இ) பதினைந்து வயதுக்குக் குறையாதவராகவும் உள்ள எவரையும் ஆதார நூல்நிலையத்தை உபயோகிக்க அனுமதிக்கலாம்.

26. பார்ப்பதற்காக அவருக்கு கொடுக்கப்படும் புத்தகம் எதையும் எவரும் ஆதார நூல்நிலையத்துக்கு வெளியே கொண்டுபோகக்கூடாது.

27. (1) ஆதார நூல் நிலையமானது, இத்துணைவிதியின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைந்து, ஞாயிற்றுக்கிழமை அல்லது பொது விடுமுறை தினம் அல்லாத மற்றெத்தினத்திலும் காலை 8 மணிக்கும் மத்தியானம் 12 மணிக்குமிடையிலும் பிற்பகல் 2.30 மணிக்கும் மாலை 6.30 மணிக்கு மிடையிலும் திறந்திருத்தல் வேண்டும்.

(2) சபை தீர்மானத்தின் மூலம்—

(அ) இத்துணைவிதியின் (1) ஆம் பந்தியில் குறித்துள்ள நேரங்களை நீடிக்கலாம் ;

(ஆ) ஞாயிற்றுக்கிழமையில் அல்லது பொது விடுமுறை தினத்தில், அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய நேரங்களில் ஆதார நூல்நிலையத்தைத் திறந்து வைக்கும்படி குழுவைக் கேட்கலாம் ; அல்லது

(இ) கையிருப்பைக் கணக்கெடுப்பதற்கு சபையால் நியமிக்கப்படும் தினங்களில் ஆதார நூல்நிலையத்தை மூடும்படி குழுவைக் கேட்கலாம்.

### வாசகசாலை

28. எவரும்—

(அ) நூல்நிலையப் பொறுப்பாளரிடமிருந்து, அவர், அதன் பொருட்டு அனுமதி பெற்றிருந்தாலன்றியும் ;

(ஆ) வாசகசாலையில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில், அவர் கையொப்பமிட்டிருந்தாலன்றியும்

வாசகசாலையை உபயோகிக்கக்கூடாது.

29. நூலகப் பொறுப்பாளர்—

(அ) படித்தவராகவும்,

(ஆ) மாநகர சபைப் பிரதேசத்துக்குள் வசிப்பவராகவும் ;

(இ) பதினைந்து வயதுக்குக் குறையாதவராகவும் உள்ள எவரையும் வாசகசாலையை உபயோகிக்க அனுமதிக்கலாம்.

30. (1) வாசகசாலையானது, இத்துணைவிதியின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைந்து, ஞாயிற்றுக்கிழமை அல்லது பொது விடுமுறை தினம் அல்லாத மற்றெத்தினத்திலும் காலை 8 மணிக்கும் மத்தியானம் 12 மணிக்குமிடையில் பிற்பகல் 6.30 மணிக்கும் மாலை 7.30 மணிக்கு மிடையிலும் திறந்திருத்தல் வேண்டும்.

(2) சபை, தீர்மானத்தின் மூலம்—

(அ) இத்துணைதியின் (1) ம் பந்தியில் குறித்துள்ள நேரங்களை நீடிக்கலாம்,

(ஆ) ஞாயிற்றுக்கிழமையில் அல்லது பொதுவிடுமுறை தினத்தில், அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய நேரங்களில் வாசகசாலையைத் திறந்து வைக்கும்படி குழுவைக் கேட்கலாம்; அல்லது

(இ) கையிருப்பைக் கணக்கெடுப்பதற்கு, சபையால் நியமிக்கப்படும் தினங்களில் வாசகசாலையை மூடும்படி குழுவைக் கேட்கலாம்.

31. வாசகசாலையில் வைக்கப்பட்டுள்ள அல்லது அதற்குரித்தான செய்தித்தாள் தவணை வெளியீடு, சஞ்சிகை, தேசப்படம், பத்திரம் எழுத்துப்பிரதி அல்லது வேறு பொருள் எதையும், எவரும் வாசகசாலையிலிருந்து அகற்றக்கூடாது.

### பொது

32. தொற்று நோயால், ஒட்டு நோயால் அல்லது சரும நோயால் வருந்தும் அல்லது சமீபகாலத்தில் வருந்திய அல்லது அத்தகைய நோயால் வருந்தும் எவருக்கும் சமீபகாலத்தில் பணிவிடை செய்த எவரும், நோய் தொற்றும் கால எல்லையும் காத்தற்கால எல்லையும் கழியும் வரை, பொது நூல் நிலையவளவுக்குள் பிரவேசிக்கக்கூடாது.

33. எவரும்—

(1) பொது நூல்நிலைய மனையகத்தில் அல்லது அதன் சுற்றுப்புறத்தில் ஒழுங்கீனமான முறையில் நடந்துகொள்ளவேனும் ஏதும் தொல்லை உண்டு பண்ணவேனும் கூடாது.

(2) பொது நூல்நிலையத்திலேனும் அதன் சுற்றுப்புறத்திலேனும் உள்ள கட்டத்தின் எப்பாகத்தையும் அல்லது சபைக்குரிய எச்சொத்தையும் சேதப்படுத்த வேனும் எவ்வகையிலும் உருக்கலைக்கவேனும் கூடாது.

(3) பொது நூல்நிலையம் மூடப்பட்டபின் அந்நூல் நிலையத்தின் சுற்றுப்புறத்தில், தாம் அங்கிருக்க நேர்ந்தமைக்கு திருப்தியான காரணம் கூற முடியாது தங்கவோ, திரியவோ கூடாது.

(4) பொது நூல்நிலைய மனையகத்துள் புகைக்கவோ துப்பவோ கூடாது.

(5) பொது நூல் நிலைய மனையகத்துள் தாயக்கட்டை அல்லது சீட்டுகள் கொண்டு சூதாட்டமோ எதும் ஆட்டம் ஆடவோ கூடாது.

(6) பொது நூல்நிலையத்தில் கூச்சல்போட்டு, பாட்டுகள் பாடி அல்லது வேறு ஏதும் சப்தம் செய்து அந்த நூலகத்தை உபயோகிப்பவர்களை குழப்பக்கூடாது.

(7) அசுத்தமான நிலையில் பொது நூல்நிலைய மனைக்குள் பிரவேசிக்கக்கூடாது.

(8) பொது நூல்நிலைய மனைக்குள் நாய் அல்லது வேறு மிருகம் எதையும் கொண்டுவரக்கூடாது.

(9) பொது நூல்நிலைய மனைக்குள் எப்பாகத்துக்குள்ளேனும் சயனிக்கவோ உணவு எதுவும் அருந்தவோ கூடாது.

(10) நூல்நிலையப் பொறுப்பாளரையாவது நூல்நிலைய பொறுப்பாளரின் கட்டளைகளின்படி செயலாற்றும் எவரையுமாவது, இத்துணை விதிகளின் கீழ் அவருக்குள்ள அதிகாரங்களைச் சட்டமுறையாகச் செலுத்துகையில் தடைசெய்யக்கூடாது.

34. துணைவிதி 31ஐ, துணைவிதி 32ஐ, அல்லது துணைவிதி 33 ஐ மீறிய செயல் ஒவ்வொன்றும் ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத தண்டத்தால் தண்டிக்கப்படக்கூடியதாகும்.

35. இத்துணைவிதிகளில்—

"சபை" என்பது நீர்கொழும்பு மாநகர சபை எனப்பொருள்படும்.

"குழு" என்பது சபையால் நியமிக்கப்பட்ட நூல்நிலையக்குழு எனப் பொருள்படும்.

"நூல் நிலையப் பொறுப்பாளர்" என்பது நூல்நிலையத்துக்குப் பொறுப்பாளியாகச்சபையால் நியமிக்கப்பட்ட ஆள் எனப் பொருள்படுவதோடு அவரது உதவியாளர்களையும் உட்படுத்தும்.

"மாநகரசபைப் பிரதேசம்" என்பது நீர்கொழும்பு மாநகரசபைப் பிரதேசம் எனப் பொருள்படும்.

1–569—16.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,889

# நானாவித அறிவித்தல்கள்

## சின்னச் செட்டிகுளம் மேற்கு கிராம சபை

### இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272) 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்க்காணப்படும் அட்டவணையில் காணபவரிடமிருந்து 1970 ம் ஆண்டுக்கு இறைச்சிக்கடைக்கு லைசென்ஸ் தரும்படி விண்ணப்பம் கிடைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கிராமசபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் லைசென்ஸ் கொடுப்பதை மறுக்கவிரும்பினுல் மறுப்புக்கான காரணங்களை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினுன்கு நாட்களுக்கிடையில் இணைப்பிரதியாக எமக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அட்டவணை

| விண்ணப்பகாரரின் பெயர் | விலாசம் | வியாபாரம் செய்யுமிடம் |
|---|---|---|
| முகமதலி மீராமுகைதீன் | இல. 183, 1 ம் படிவம், பாவற்குளம். | இறைச்சிக்கடை, 1 ம் படிவம், பாவற்குளம். |

அ. சுலைமான்லெவ்வை,
அக்கிராசனர், கி. ச.,
சின்னச்செட்டிகுளம் மேற்கு.

கிராமசபைக் காரியாலயம்,
சின்னச்செட்டிகுளம் மேற்கு,
பூவரசங்குளம்,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 15 ந உ.

1–638—16.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,889.

## கரைவாகு வடக்குக் கிராம சபை

### இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய 1947 ம் ஆண்டின் 44 ம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்க்காணும் அட்டவணையிற் காணபோரிடமிருந்து 1970 ம் ஆண்டுக்கு ஆடு/மாடடித்து இறைச்சி விற்பதற்கான உத்தரவுப் பத்திரம் தருமாறு விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன.

இக்கிராம சபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் மேற்குறிப்பிடப்பட்ட உத்தரவுப்பத்திரம் கொடுப்பதை மறுக்க விரும்பின் மறுப்புக்கான காரணங்களை இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஏழு (7) நாட்களுக்குள் இணைப்பிரதிகளாக எமக்கனுப்பிவைக்கும்படி இத்தால் வேண்டப்படுகிறது.

| தொ. இல. | விண்ணப்பகாரர் பெயர் | விலாசம் | விரும்பும் தொழில் | செய்யுமிடம் |
|---|---|---|---|---|
| 1. | மு. இ. மு. அபூவக்கர் | மருதமுனை—2 | மாட்டிறைச்சி விற்றல் | மருதமுனை தென் தெரு, பள்ளிவாயல் கடை |
| 2. | பை. ம. மு. அபூவக்கர் | ஷை | ஷை | ஷை |
| 3. | க. லெ. மு. பிச்சை | மருதமுனை—1 | ஷை | ஷை |
| 4. | மு. மீ. மு. இஸ்மாயில் | மருதமுனை—2 | ஷை | ஷை |
| 5. | ஆ. அப்துல்றகுமான் | ஷை | ஆட்டிறைச்சி விற்றல் | ஷை |
| 6. | செ. அ. செ. அகமது | ஷை | மாட்டிறைச்சி விற்றல் | மருதமுனை சந்தைக்கடை |
| 7. | மு. இ. மு. நூர்தீன் | ஷை | ஷை | ஷை |
| 8. | எம். ஏ. எம். இப்றுகிம் | ஷை | ஷை | ஷை |
| 9. | க. லெ. யூசுப்புலெவ்வை | பாண்டிருப்பு—1 | ஷை | 6 ம் வட்டாரக் கடை |
| 10. | அ. வ. மீராமுகைதீன் | மருதமுனை—1 | ஷை | 3 ம் வட்டாரம், மக்காமடி றோட்டுக்கடை |
| 11. | மு. இ. ஹயாத்துமுகம்மது | ஷை | ஆட்டிறைச்சி விற்றல் | க. வ. கி. ச. எல்லை கொண்டு திரிந்து விற்றல் |
| 12. | மு. அ. அப்துல்றகீம் | பாண்டிருப்பு—1 | ஷை | ஷை |

அல்–ஹாஜ் செ. செ. ம. மஃவுலானு,
தலைவர், ஜே.பி.,
கரைவாகு வடக்கு கிராம சபை,

கிராம சபை அலுவலகம்,
கரைவாகு வடக்கு, பெரியநீலாவணை,
கல்முனை,
31.12.69
4.1.70

1-584—16.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,889

## நிந்தவூர் கிராம சபை

### இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய 1947 ம் ஆண்டின் 44 ம் இலக்கச் சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி பின்வரும் அட்டவணையிற் சொல்லப்படுபவர்களிட மிருந்து 1969 ம் ஆண்டிற்கு புச்சர் லைசன்ஸ் தரும்படி விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றது.

ஆகவே இக்கிராம சபைக்குட்பட்ட இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் குறிக்கப்பட்ட லைசன்ஸ் கொடுப்பதை மறுக்க விரும்பினால் மறுப்பிற் கான காரணங்களை 14 நாட்களுக்குள் இணைப்பிரதிகளாக நமக்கு அனுப்பி வைக்கும்படி இத்தால் அறிவிக்கப்படுகிறது.

கிராம சபை காரியாலயம்,
நிந்தவூர்.

ஐ. எச். எஸ். எம். புகாரி,
கி. ச. அக்கிராசனர்,
நிந்தவூர்.

| | பெயர்கள் | விலாசம் | வட்டாரம் | வியாபாரம் செய்யுமிடம் |
|---|---|---|---|---|
| 1. | பை. காசின்வாவா | 3 ம் குறிச்சி, நிந்தவூர் | 1 ம் வாட் வடக்கு | நிந்தவூர் மார்கட் கடை |
| 2. | ஆ. அகமதுலெவ்வை | 1 ம் குறிச்சி, நிந்தவூர் | 1 ம் வாட் தெற்கு | ஷை |
| 3. | மீ. முகம்மதுத்தம்பி | 1 ம் குறிச்சி, நிந்தவூர் | 2 ம் வாட் | நிந்தவூர் மார்கட் கடை |
| 4. | ஆ. சீனிமுகம்மது | 1 ம் குறிச்சி, நிந்தவூர் | 3 ம் வாட் வடக்கு | ஷை |
| 5. | க. அப்துல் றசாக் | 3 ம் குறிச்சி, நிந்தவூர் | 3 ம் வாட் தெற்கு | ஷை |
| 6. | மீ. சீனித்தம்பி | 4 ம் குறிச்சி, நிந்தவூர் | 4 ம் வாட் | ஷை |
| 7. | உ. முகைதீன்வாவா | 4 ம் குறிச்சி, நிந்தவூர் | 5 ம் வாட் | ஷை |
| 8. | அ. அப்துல் கரீம் | 4 ம் குறிச்சி, நிந்தவூர் | 6 ம் வாட் வடக்கு | ஷை |
| 9. | மு. அகமதுலெவ்வை | 5 ம் குறிச்சி, நிந்தவூர் | 6 ம் வாட் தெற்கு | ஷை |
| 10. | மு. இ. அகமதுலெவ்வை | 4 ம் குறிச்சி, நிந்தவூர் | 7 ம் வாட் | ஷை |
| 11. | மு. ஆதம்வாவா | 5 ம் குறிச்சி, நிந்தவூர் | 8 ம் வாட் வடக்கு | ஷை |
| 12. | அ. அசனர் | 4 ம் குறிச்சி, நிந்தவூர் | 8 ம் வாட் தெற்கு | ஷை |

1-587—16.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,889

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | 2.1·70 | வெள்ளி | 26.12.69 | வெள்ளி | பி. ப. | 3·30 |
| | 9.1·70 | வெள்ளி | 2. 1.70 | வெள்ளி | பி. ப. | 3·30 |
| | 16.1·70 | வெள்ளி | 8. 1.70 | வியாழன் | பி. ப. | 3·30 |
| | 23.1·70 | வெள்ளி | 16. 1.70 | வெள்ளி | ந. ப. | 12·00 |
| | 29.1·70 | வியாழன் | 21. 1.70 | புதன் | ந. ப. | 12·00 |
| **பெப்புருவரி** | 5.2.70 | வியாழன் | 28. 1.70 | புதன் | பி. ப. | 3.30 |
| | 13.2.70 | வெள்ளி | 5. 2.70 | வியாழன் | ந. ப. | 12.00 |
| | 20.2.70 | வெள்ளி | 13. 2.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 27.2.70 | வெள்ளி | 20. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| **மார்ச்சு** | 5.3.70 | வியாழன் | 27. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 13.3.70 | வெள்ளி | 5. 3.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 20.3.70 | வெள்ளி | 13. 3.70 | வெள்ளி | பி. ப | 3.30 |
| | 26.3.70 | வியாழன் | 20. 3.70 | வெள்ளி | பி. ப | 3.30 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி, கொழும்பு,
**1969 ஆம் ஆண்டு திசெம்பர் மீ 12 ஆந் உ.**